மாலை மலர் வழங்கும்




ஸ்ரீ ராம பக்த
ஆஞ்சநேயர் கோவில்
அனுமன் ஜெயந்தி விழா
சிறப்பு மலர்

24
பக்க புத்தகம்
இலவசம்

ராமர் பட்டாபிஷேகத்தை
வணங்கும்
ஸ்ரீராம பக்த
ஆஞ்சநேயர்





ஆஞ்சநேயர்
வழிபாட்டின்
பலன்கள்

அனுமன் ஜெயந்தி
சிறப்பு தகவல்கள்



செல்வ வளம் தரும்
ராமர் பாத வழிபாடு

ஸ்ரீராமபக்த ஆஞ்சநேயர்
கோவிலில்
சனிக்கிழமை தோறும் அன்னதானம்



இன்னும் ஏராளமான
தகவல்கள்

மாலைமலருடன்
நாளை (வெள்ளிக்கிழமை)
வெளிவருகிறது

'போலீசை கூப்பிடுங்க என்று கதறினார்'

# பணியில் இருந்த நெல்லை பெண் மேலாளர் உடல் கருகி பலியானது எப்படி?

## மதுரை எல்.ஐ.சி. கட்டிட தீ விபத்து பற்றிஉருக்கமான தகவல்கள்

மதுரை டிச.18—

மதுரை மேலவெளி வீதியில் உள்ள ரெயில் நிலையம் எதிரே எல்.ஐ.சி. அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இங்கு 50—க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இங்குள்ள 2—வது தளத்தில் எல்.ஐ.சி. வீட்டு கடன் பிரிவு மற்றும் தனியார் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் எல்ஐ.சி. புதிய பாலிசி அறிமுகப் படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று இரவு 8 மணி அளவில் நடைபெற்றது. இதில் முதுநிலை மேலாளர் கல்யாணி நம்பி (வயது 54), அலுவலக உதவி நிர்வாக அதிகாரி ராம் மற்றும் ஊழியர்கள் ஆலோசனை நடத்தினர்.

தீ விபத்து

கூட்டம் முடிந்தபின் ஊழியர்கள் அனைவரும் சென்று விட இறுதியாக கல்யாணி நம்பி, ராம் ஆகியோர் வீட்டுக்கு புறப்பட தயாரான போது திடீரென 2—வது தளத்தில் தீ விபத்து ஏற்பட்டது. சிறிது நேரத்தில் தீ வேகமாக பரவியது. அலுவலக அறை முழுவதும் கரும்புகை சூழ்ந்ததால் அவர்களால் அங்கிருந்து வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

இந்த நிலையில் கீழ்தளத்தில் உள்ள ஏ.டி. எம். மையத்துக்கு வந்திருந்த சிலர் தீ விபத்து நடந்த தளத்திற்கு சென்று அங்கு காயங்களுடன் கிடந்த ராமை மீட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இது குறித்து அவர்கள் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

திடீர் நகர், தல்லாகுளம் தீயணைப்பு நிலையத்தில் இருந்து வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். சுமார் ஒரு மணி நேரம் போராட்டத்திற்கு பின் தீயணைப்பு வீரர்கள் தீயை போராடி அணைத்தனர்.

பின்னர் அலுவலகத்திற்குள் சென்று பார்த்தபோது அங்கு கல்யாணி உடல் கருகி இறந்து கிடந்தார். அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு



பலியான கல்யாணி நம்பி

அனுப்பி வைத்தனர். தீ விபத்து குறித்து திலகர் திடல் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில் குளிர் சாதன பெட்டியில் ஏற்பட்ட மின் கசிவு விபத்துக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என தெரிய வந்துள்ளது.

தீ விபத்தை நேரில் பார்த்தவர் கூறுகையில், கீழ்தளத்தில் உள்ள ஏ.டி. எம்—ல் பணம் எடுக்க வந்த போது எல்.ஐ.சி. அலுவலகத்தில் இருந்து தீ பிடித்து கடும் புகை வந்தது. உடனடியாக அங்கு சென்று கண்ணாடி கதவை உடைத்து காயமடைந்து கிடந்த ராமு என்ற நபரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். கட்டிடத்தில் உள்ள 3 தளத்திற்கும் சென்று வந்த நிலையில் அங்கு புகை மண்டலமாக காட்சியளித்ததால் பெண் மேலாளர் சிக்கி உள்ள விபரம் எங்களுக்கு தெரியவில்லை. இதனால் கீழே இறங்கி விட்டோம்.

பின்னரும் யாராவது உள்ளே இருக்கிறார்களா? என்று பார்த்தோம். ஆனாலும் எதுவும் தெரியவில்லை. தீ விபத்தில் பெண் மேலாளர் இறந்தது மிகுந்த கவலை அளிக்கிறது என தெரிவித்தார்.

இடமாற்றம்

தீ விபத்தில் பலியான கல்யாணி நம்பி திருநெல்வேலியை சேர்ந்தவர் ஆவார். அங்கு எல்.ஐ.சி. கிளை மேலாளராக பணியாற்றி வந்துள்ளார். சில மாதங்களுக்கு முன்பு மதுரைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட கல்யாணி பதவி உயர்வு பெற்று இங்கு முதுநிலை கிளை மேலாளராக பொறுப்பேற்றதாக கூறப்படுகிறது. இதற்காக பொன்மேனியில் வீடு எடுத்து தங்கி அங்கிருந்து தினமும் அலுவலகத்திற்கு வந்து சென்றுள்ளார்.

இவரது கணவர் அழகிய நம்பி. இவர் அகில இந்திய வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர்களுக்கு அபிராமி என்ற மகளும்,லட்சுமி நாராயணன் என்ற மகனும் உள்ளனர்.

வழக்கமாக தினமும் காலை 9.30 மணிக்கு பணிக்கு வரும் கல்யாணி நம்பி இரவு 8.30 மணிக்கு வீடு திரும்புவதை வழக்கமாக கொண்டுள்ளார். இந்த நிலையில் நேற்றும் பணிக்கு சென்ற கல்யாணி நம்பி இரவு 8.30 மணியை கடந்தும் வீட்டிற்கு வரவில்லை. இதனால் அவரது மகள் லட்சுமி நாராயணன் செல்போனில் தொடர்பு கொண்டுள்ளார்.

அப்போது செல்போனை ஆன் செய்த கல்யாணி நம்பி பேசமுடியவில்லை. ஆனாலும் 'போலீசை கூப்பிடுங்க.. போலீசை கூப்பிடுங்கள்...' என்று அவரது அலறல் சத்தம் மட்டும் போனில் கேட்டுள்ளது.

இதனால் பதட்டமடைந்த லட்சுமி நாராயணன் நேராக சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தார். அவர் எல்.ஐ.சி. அலுவலகத்திற்கு முன்பு வந்தபோது போலீசாரும், பொதுமக்களும் அதிகளவில் திரண்டிருந்தனர். தீயணைப்பு துறையினர் தீ விபத்து நடந்த கட்டிடத்திற்குள் தீயை அணைத்து கொண்டிருந்தனர்.

அப்போது கல்யாணி நம்பியின் உடல் கருகிய நிலையில் ஸ்டிரக்சரில் கொண்டு வரப்பட்டது. அதனை பார்த்த லட்சுமி நாராயணன் கதறி துடித்தார். உடனடியாக 108 ஆம்புலன்சு மூலம் தனது தாயை ஏற்றி கொண்டு மதுரை அரசு ஆஸ்பத்திரிக்கு சென்ற நிலையில் அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டது. பலியான கல்யாணி நம்பியின் உடலை பார்த்து அவரது குடும்பத்தினர் கதறி அழுதது பரிதாபமாக இருந்தது.




திருச்செந்தூர்

# டாக்டர் சிவந்தி ஆதித்தனார் உடற்கல்வியியல் கல்லூரியில் கருத்தரங்கு

திருச்செந்தூர், டிச.18—

திருச்செந்தூர் டாக்டர் சிவந்தி ஆதித்தனார் உடற்கல்வியியல் கல்லூரியில் சிறப்புணர்வு கல்வி முறை என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவரையும் கல்லூரி முதல்வர் முனைவர் ஷீலா ஸ்டீபன் வரவேற்றார். நிகழ்ச்சியில் ஆதித்தனார் கல்வி நிறுவன செயலாளர் முனைவர் நாராயண ராஜன் மற்றும் ஆலோசகர் முனைவர் மகேந்திரன் ஆகியோர் கவுரவ விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இந்த கருத்தரங்கின் வளநபராக நாகர்கோவில் புனித ஜெரோம்ஸ் கல்லூரி முதல்வர் முனைவர் ஜேம்ஸ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் தம் சிறப்புரையில், கல்வியின் முக்கியத்துவம், கற்றல் முறையின் சாராம்சங்கள், கற்றல் சார்ந்த பாடத்திட்ட கட்டமைப்பு குறித்த நுணுக்கங்கள் மற்றும் கற்றல் விளைவுகளின் அடிப்படை மதிப்பீடு குறித்து பேசினார்.

நிகழ்ச்சியைத் தொடர்ந்து கல்லூரியின் செய்திமடல் தொகுதி—1 எண்.4 வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் உதவிப் பேராசிரியர் கணேஷ் நன்றி கூறினார். கருத்தரங்கில் தூத்துக்குடி மற்றும் நெல்லையை சேர்ந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் ஆதித்தனார் கல்வி நிறுவனத்தின் கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர்கள் செய்திருந்தனர்.

நாகையில்

# அடிபட்டு கிடந்த ஆஸ்திரேலியாவை சேர்ந்த அரிய வகை பறவை

## வனத்துறையினர் மீட்டு சிகிச்சை

நாகப்பட்டினம், டிச.18—

நாகை புதிய கடற்கரை ரெயில்வே கேட் பகுதியில் பறவை ஒன்று அடிபட்டு பறக்க முடியாமல் கிடந்தது.

அந்த பறவையை அங்கிருந்த நாய்கள் பிடிக்க துரத்தின. இதைப்பார்த்த புதிய கடற்கரை பொறுப்பாளர் தேவராஜ், அந்த பறவையை மீட்டு அங்குள்ள அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்து இருந்தார்.



பின்னர் அவர் இதுகுறித்து வனத்துறைக்கு தகவல் தெரிவித்தார். அந்த தகவலின் பேரில் அங்கு வந்த வனத்துறையினர் பறவையை மீட்டு பரிசோதனை செய்தனர்.

இதில் அந்த பறவை ஆஸ்திரேலியாவில் காணப்படும் அரியவகை சிவப்பு மூக்கு ஆளான் பறவை என்பது தெரிய வந்தது. அது ஒரு அடி நீளம், 1/2 கிலோ எடையுடன் இருந்தது. மேலும் அந்த பறவையின் சிறகுகளில் அடிபட்டு காயம் ஏற்பட்டதால் அதனால் பறக்க முடியவில்லை என்பதும் தெரியவந்தது.

தற்போது கோடியக்கரைக்கு வெளிநாட்டு பறவைகள் வலசை வரும் காலம் ஆகும். அப்படி இந்த பறவை ஆஸ்திரேலியாவில் இருந்து 10 ஆயிரம் கிலோமீட்டர் பறந்து வந்த போது அடிபட்டு விழுந்திருக்கலாம் என வனத்துறையினர் தெரிவித்தனர். அதைத்தொடர்ந்து அந்த பறவையை வனத்துறையினர் மீட்டு சிகிச்சைக்கு எடுத்து சென்றனர்.

குலையன்கரிசலில்

# மார்கழி மாத பஜனை தொடக்கம்

சாயர்புரம், டிச.18—

குலையன் கரிசல் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவிலில் மார்கழி பஜனை தொடக்கபட்டது. இதில் அதிகாலை 5 மணிக்கு இளைஞர்கள், சிறுவர்கள் பனியை பொருட்படுத்தாமல் குளித்து விட்டு வெள்ளை வேஷ்டி அணிந்து பஜனை பாடல்களை பாடி வீதி வீதியாக வந்தார்கள். இந்த நிகழ்ச்சியில் ஏராளமான இளைஞர்கள், சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

# மோட்டார் சைக்கிள் மீது கார் மோதி பெண் டாக்டர் பலி

## திருமணமான 6 மாதத்தில் விபத்தில் உயிரிழந்த சோகம்

சூலூர், டிச.18—

கோவை மாவட்டம் சூலூர் கண்ணம்பாளையம் மனோஜ் நகரை சேர்ந்தவர் கார்த்திக்.

இவர் கர்நாடக மாநிலம் பெங்களூருவில் உள்ள ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறார்.



சரண்யா தேவி.

இவருக்கும், தர்மபுரியை சேர்ந்த டாக்டரான சரண்யாதேவி என்பவருக்கும் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. இதையடுத்து கார்த்திக்கும், சரண்யா தேவியும் மனோஜ்நகரில் உள்ள வீட்டில் வசித்து வந்தனர். கார்த்திக் பெங்களூருவில் உள்ள ஐ.டி. நிறுவனத்தில் வேலை பார்ப்பதால் விடுமுறை நாட்களில் சொந்த ஊருக்கு வந்து செல்வார்.

சரண்யா தேவி சூலூர் அடுத்த கள்ளப்பாளையம் பகுதியில் உள்ள கடிகாரம் தயாரிக்கும் தனியார் கம்பெனியில் மருத்துவ ஆலோசகராக பணியாற்றி வந்தார். இவர் தினமும்மோட்டார் சைக்கிளில் தனது வீட்டில் இருந்து வேலை பார்க்கும் நிறுவனத்திற்கு செல்வது வழக்கம்.

நேற்று காலை சரண்யா தேவி வழக்கம் போல வீட்டில் இருந்து தனது மோட்டார் சைக்கிளில் வேலைக்கு புறப்பட்டார். அவரது மோட்டார் சைக்கிள் பீடம்பள்ளி பிரிவு அருகே சென்றபோது, எதிரே வந்த கார் சரண்யாதேவியின் மோட்டார் சைக்கிள் மீது பயங்கரமாக மோதியது.

இதில் சரண்யா தேவி தூக்கி வீசப்பட்டு பலத்த காயம் அடைந்து உயிருக்கு போராடி கொண்டிருந்தார். இதை பார்த்து அதிர்ச்சியான அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்சுக்கு தகவல் தெரிவித்தனர். ஆம்புலன்சு உதவியாளர்கள் விரைந்து வந்து பார்த்த போது சரண்யாதேவி, சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டது தெரியவந்தது.

சரண்யா தேவியின் கணவர் கார்த்திக் சில நாட்களுக்கு முன்பு தான் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தார். விடுமுறையை முடித்து கொண்டு நேற்று காலை தான் அவர் பெங்களூரு புறப்பட்டார். அவர் அங்கு செல்வதற்குள் மனைவி உயிரிழந்த தகவல் வந்து, உடனே அவர் கோவை திரும்பி வந்தார். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**NAME CHANGE**

I, ANNAPOORANESAN (அன்னபூர்னேசன்), son of Palsamy, Born on 04/06/1982 (Native District Tenkasi), residing at No. 151/11, G.H Road Street, T.N. Puthukudi, Puliangudi-627855, Tenkasi District, Tamil Nadu, shall henceforth be known as ANNA POORANESAN (அன்னபூர நேசன்)

ANNAPOORANESAN

தமிழகம், கர்நாடகாவில்

# 100-க்கும் மேற்பட்ட பெண்களிடம் செயின் பறித்த கொள்ளையர்கள்

## புதுச்சேரியில் கைவரிசை காட்டிய போது சிக்கினர்

புதுச்சேரி, டி.ச.18—

புதுச்சேரி ஆலங்குப்பத்தை சேர்ந்தவர் ஜெயந்தி (வயது30). இவர் புதுச்சேரி தொழிற்பேட்டையில் உள்ள தனியார் கம்பெனியில் பணியாற்றி வருகிறார்.

பெண்களிடம் நகை பறிப்பு

சம்பவத்தன்று வேலைக்கு நடந்து சென்ற போது பைக்கில் பின்தொடர்ந்து வந்த 2 பேர் அவர் கழுத்தில் அணிந்திருந்த ஒரு பவுன் செயினை பறித்து சென்றனர்.

இதேபோல் புதுச்சேரி கதிர்காமத்தை சேர்ந்த தமிழ்ச்செல்வி (51) என்பவர் கோரிமேடு பகுதியில் நடைபயிற்சி சென்ற போது பைக்கில் வந்த 2 பேர் 6½ பவுன் செயினை பறித்துச்சென்றனர்.

இந்த 2 நகை பறிப்பு சம்பவம் தொடர்பாக கோரிமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பிச்சென்ற கொள்ளையர்களை தேடி வந்தனர்.

பெங்களூரு கொள்ளையன்

இதுதொடர்பாக கோரிமேடு போலீஸ் இன்ஸ்பெக்டர் பாலமுருகன், சப்—இன்ஸ்பெக்டர் ரமேஷ் மற்றும் போலீசார் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டது. தனிப்படை போலீசார் அப்பகுதியில்




கைதான கொள்ளையர்கள் 2 பேரை படத்தில் காணலாம்.

உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர்.

அப்போது அதில் பதிவான காட்சிகளை கொண்டு நகை பறிப்பில் ஈடுபட்டது பெங்களூருவை சேர்ந்த பிரபல கொள்ளையன் கலு என்ற இப்ராகிம் பாஷா (வயது36) மற்றும் அவனது கூட்டாளியான திருவண்ணமலையை சேர்ந்த பட்டதாரி வாலிபர் அரசு என்ற வல்லரசு (25) என்பது தெரிய வந்தது.

இதையடுத்து துரிதமாக அவர்களை கண்காணித்த போலீசார் புதுச்சேரி துத்திப்பட்டு பகுதியில் பதுங்கியிருந்த அவர்கள் 2பேரையும் கைது செய்தனர்.

கை முறிந்தது

முன்னதாக போலீசாரிடம் இருந்து தப்பி ஓட முயன்ற போது வழுக்கி விழுந்ததில் இப்ராகிம் பாஷாவுக்கு வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

100–க்கும் மேற்பட்டவர்களிடம் கைவரிசை

விசாரணையில் பிரபல கொள்ளையனான இப்ராகிம் பாஷா மீது கர்நாடகா. தமிழகத்தில் 100—க்கும் மேற்பட்ட திருட்டு, நகை பறிப்பு வழக்குகள் உள்ளன.

கைதானவர்களிடம் இருந்து 10 பவுன் நகைகளை போலீசார் மீட்டனர். மேலும் அவர்கள் நகை பறிப்புக்காக பயன் படுத்திய 2 பைக்குகள், 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

**VTM லிமிடெட்**

CIN L17111TN1946PLC003270

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர், தமிழ்நாடு — 626003

இணையதளம்: www.vtmill.com | மின்னஞ்சல்: complianceofficer@vtmill.com | தொலைபேசி: +91 452 2482595

**நிர்வாகக் குழு கூட்ட முடிவுகள்**

SEBI (LODR) Regulations, 2015 இன் அட்டவணை III உடன் படிக்கப்பட்ட ஒழுங்குமுறை 30-இன் படியும், நிறுவனங்கள் சட்டம், 2013-இன் பிரிவு 203-ஐ நிறுவனங்கள் (மேலாண்மைப் பணியாளர்களின் நியமனம் மற்றும் ஊதியம்) விதிகள், 2014-இன் விதி 8 உடன் சேர்த்துப் படிப்பதன் படியும், மற்றும் இந்திய நிறுவனச் செயலாளர்கள் நிறுவனம் வெளியிட்ட செயலகத் தரநிலை—1-இன் படியும், VTM லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர் குழு, திங்கட்கிழமை, டிசம்பர் 15, 2025 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில் பின்வருவனவற்றைப் பரிசீலித்து ஒப்புதல் அளித்துள்ளது என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது:

தலைமை நிதி அதிகாரியின் நியமனம்

திரு. P. செந்தில் குமார் அவர்கள் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியாக (CFO) டிசம்பர் 15, 2025 முதல் நியமிக்கப்படுவதற்கு இயக்குநர் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

SEBI (LODR) Regulations, 2015 இன் ஒழுங்குமுறை 30-இன் கீழ் தேவைப்படும் விரிவான வெளிப்படுத்தல், நிறுவனத்தின் இணையதளமான www.vtmill.com-இல் வெளியிடப்படும், மேலும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பங்குச் சந்தைகளிலும் தாக்கல் செய்யப்படும்.

நாள் : டிசம்பர் 15, 2025
இடம் : மதுரை

VTM லிமிடெட்டிற்காக,
கா.பிரியதர்ஷினி
நிறுவன செயலாளர் & இணக்க அதிகாரி